புலமைப்பரிசில் வகுப்பு
ஆண்டு 5 புலமைப்பரிசில்
நாளாந்த சனி, ஞாயிறு
வகுப்புக்கள்
ஆண்டு 3 தொடக்கம்
ஆண்டு 9 வரை
சகல பாடங்களும்
ஆரம்பமாகியுள்ளன
புதிய கல்வி நிலையம்
291, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூ.
5-00

விற்பனையாகிறது!
புலமைப்பரிசில் பயிற்சி
21 கட்டுரைகள்
10 மாதிரி வினாத்தாள்கள்
விடைகளுடன்
எல்லாப் புத்தகசாலைகளிலும்
பெற்றுக்கொள்ளலாம்

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 கார்த்திகை 02 புதன்கிழமை (17 – 11 – 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 354


## பூநகரி முகாம் மீது நேற்றும் புலிகள் பீரங்கித் தாக்குதல்

### சில சிப்பாய்கள் காயமுற்றனர்

கடந்த வாரம் பூநகரி முகாமில் இருந்து கைப்பற்றிய 120 மி. மீ. பீரங்கிகளைப் பயன்படுத்தி பூநகரி இராணுவ முகாம் மீது நேற்று விடுதலைப் புலிகள் பீரங்கித் தாக்குதல்களை நடத்தியதாக இராணுவ வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன.

பூநகரி முகாமில் உள்ள காவலரண்களைப் பாதுகாத்த வண்ணம் இருந்த சில படையினர் இத்தாக்குதலில் காயமடைந்தனர் என்றும் இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

தாக்குதல் நடந்த பகுதி மணற்பாங்கானது என்பதால் பெரும் சேதம் ஏற்படவில்லை என்றும் அவர் கூறினார்.

## 187 படையினரின் அஸ்தி இன்று கிளிநொச்சியில் கையளிப்பு

யாழ்ப்பாணம், நவ. 17

பூநகரித் தாக்குதலின் போது விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட 187 படையினரின் சடலங்களின் அஸ்தி கையளிக்கும் வைபவம் இன்று கிளிநொச்சியில் இடம்பெறவிருக்கிறது.

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் இந்த அஸ்தி அடங்கிய கலசங்களை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகளிடம் கையளிக்க இருப்பதாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு யாழ். வதிவிடப் பிரதிநிதி திரு. பியட்சுவஸ்ஸர் தெரிவித்தார்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் இந்த அஸ்தியை வவுனியா படை அதிகாரிகளிடம் கையளிக்க ஏற்பாடாகியுள்ளது.

விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட படையினரின் சடலங்களை விடுதலைப் புலிகள் அப்படியே ஒப்படைக்க முன்வந்தனராயினும், சடலங்கள் பழுதடைந்த காரணத்தால் அது கைகூடவில்லை என்று முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தது தெரிந்ததே.

(உ-3)

## பிடிபட்ட ஐந்து படையினருக்கு கிளிநொச்சியில் சிகிச்சையாம்!

கொழும்பு, நவ. 17

பூநகரித் தாக்குதலின் போது விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்ட இராணுவ அதிகாரி ஒருவரும் நான்கு சிப்பாய்களும் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

கொழும்பு செய்தி வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'வெரித்தாஸ்' சிங்கள சேவைச் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி ஆஸ்பத்திரி செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் மேற்பார்வையில் இயங்கி வருகிறது என்றும் —

காயமடைந்த விடுதலைப் புலிகளும் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று இன்னொரு செய்தி தெரிவிப்பதாகவும் —

வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

கிளிநொச்சி ஆஸ்பத்திரி செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் மேற்பார்வையில் இயங்கவில்லை என்பதும் —

நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா விமானப்படையின் ''சுப்பசொனிக்'' விமானங்கள் நடத்திய குண்டு வீச்சில் அந்த ஆஸ்பத்திரி சேதமடைந்ததும் தெரிந்தவையே.

(உ-எ-6)

## பூநகரிப் பாதையைத் திறக்கும்படி அரசு அதிபர் அரசைக் கேட்பார்

பூநகரியில் இருந்து படைகளை வாபஸ் பெற்று மக்கள் பாவனைக்காக பூநகரிப் பாதையை திறக்க வேண்டும்.

—மேற்கண்டவாறு அரசாங்கத்திடம் யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கோரவிருக்கிறார்.

அடுத்த வாரமளவில் கொழும்பு செல்லும் அரச அதிபர், இதுவிடயமாக அரச அதிகாரிகளிடமும், சமூக சேவை அமைப்புக்களிடமும் தாம் பேசவிருப்பதாகத் தெரிவித்தார்.

(உ-3)

## 'சுப்பசொனிக்' விமானங்கள் இனி சீனக்குடாவில் தரிக்கும்

கொழும்பு, நவ. 17

திருமலை சீனக்குடா விமானத்தளத்தில் சீன ஜெட் போர் விமானங்களை — ''சுப்பசொனிக்'' விமானங்களை — நிறுத்துவது என்றும் —

அங்கிருந்தே வடக்கு - கிழக்கு போர் முனைகளுக்கு அவற்றை தாக்குதல் நடவடிக்கைகளுக்கு அனுப்புவது என்றும் ஸ்ரீலங்கா விமானப் படை தீர்மானித்துள்ளது.

தற்போது சீன ஜெட் போர் விமானங்கள் கட்டுநாயக்கா விமானத்தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அங்கிருந்தே அவை போர் முனைகளுக்குஅனுப்பி வைக்கப்படுகின்றன.

கட்டுநாயக்கா விமானப் படைத்தளம், கட்டுநாயக்கா சர்வதேச சிவிலியன் விமானத் தளத்துக்கு அருகில் இருக்கிறது.

அதன் காரணமாக கட்டுநாயக்கா விமானப்படைத் தளத்தில் போர்விமானங்களை நிறுத்தி வைப்பதையும் —

அவற்றை அங்கிருந்துபோர் முனைகளுக்கு அனுப்பி வைப்பதையும் —

தவிர்க்கும்படி உள்நாட்டு மற்றும் சர்வதேச விமான போக்குவரத்து நிபுணர்கள் ஸ்ரீலங்கா விமானப்படைக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

### தொடர்ந்து ஊரடங்கு

கொழும்பு, நவ. 17

யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என்று நேற்று மாலை அறிவிக்கப்பட்டது.

(உ-3)

### ஹெலியிலிருந்து கிரனேட் வீச்சு

நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் பலாலியிலிருந்து பூநகரிப் பக்கமாகச் சென்று கொண்டிருந்த நான்கு ஹெலிகளில் ஒன்றிலிருந்து ஆவரங்கால் வயல் பகுதியில் கிரனேட் வீசப்பட்டது.

(உ-15)

## அதிகாரப் பரவலாக்கல் விவகாரம்; தெரிவுக்குழு சிபார்சு தெளிவில்லை

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழு, கடந்த வாரம் சமர்ப்பித்த அறிக்கையில் —

தமிழ் மக்களுக்கு மேலதிக அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று மட்டுமே கூறியுள்ளது.

என்னென்ன மேலதிகாரங்கள், அவை எந்த வடிவில் அமைய வேண்டும் என்ற விவரங்கள் இந்த அறிக்கையில் தெளிவாகத் தெரிவிக்கப்படவில்லை.

இந்திய அரசமைப்புக்கு அமைவாக அதிகாரப் பகிர்வு வழங்க வேண்டும் என்று குழு சிபார்சு செய்துள்ளது.

மத்திய அரசின் அதிகாரங்களும் மாநில அரசின் அதிகாரங்களும் வரையறுக்கப்பட வேண்டும் என்றும் குழு தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்பு நிலை சீரடைந்ததும் அங்கு உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்த வேண்டும் என்பதும் —

வடக்கும், கிழக்கும் தனித்தனி அமைப்புக்களாக நிர்வகிக்கப்படவேண்டும் என்பதும் தெரிவுக்குழுவின் மற்றைய சிபாரிசுகள் ஆகும்.

தெரிவுக்குழுவின் அறிக்கையில் சிங்கள மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து சிங்களக் கட்சிகளினதும் பிரதிநிதிகள் ஒப்பமிட்டுள்ளனர்.

தமிழ், முஸ்லிம் கட்சிகளின் பிரதிநிதிகள் ஏற்கனவே தெரிவுக்குழுவிலிருந்து விலகிவிட்டனர் என்பது தெரிந்ததே.

# தொண்டமானாறில் நேற்று மும்முனைத் தாக்குதல்கள்!

### மூர்ச்சந்தி முரளி



அப்ப... தெரிவுக்குழு மலையைக் கல்லி எலியைப் பிடிச்சிருக்கு எண்டு சொல்லுங்கோ.....!

## வீடுகள், பல படகுகள் சேதம்

வல்வெட்டித்துறை, நவம்பர் 17

தொண்டமானாறு, உடுப்பிட்டி மற்றும் அதை அண்டிய பகுதிகள் மீது ஸ்ரீலங்காப் படையினர் நேற்றுக் காலை மும்முனைத் தாக்குதல்களை நடத்தினர்.

இத்தாக்குதல்களினால் சிசு ஒன்று படுகாயமுற்றது; பல வீடுகள், ஒரு பாடசாலை மற்றும் பல படகுகள் ஆகியன சேதமடைந்தன.

நேற்றுக் காலை 7 மணி முதல் 9 மணி வரை —

கடலில் தரித்து நின்ற பீரங்கிப் படகுகளில் இருந்தும் —

வானத்தில் வட்டமிட்ட ஹெலிகொப்டர்கள், பொம்மர்களில் இருந்தும் —

பலாலி இராணுவ முகாமிலிருந்தும் —

மாறி மாறி தொண்டமானாறு மற்றும் அதை அண்டிய பகுதிகளை நோக்கி மும்முனைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

தொண்டமானாறு பெரிய கடற்கரைப் பகுதியில் — மீனவர் குடியிருப்புகள் மீது — நடத்தப்பட்ட விமானக்குண்டு வீச்சில் சுமார் பத்து வீடுகள் சேதமடைந்தன. அந்த வீடுகளில் இருந்த மக்கள் ஏற்கனவே இடம் பெயர்ந்து விட்டதால், இக்குண்டு வீச்சின் போது உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டன.

பலாலி இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் தொண்டமானாறு, வல்வைப் பகுதிகளில் விழ்ந்து வெடித்தன.

இதனால் வல்வை ஆதி கோயிலடியில் நான்கு மாதப் பெண் சிசுவான — அமிர்தலிங்கம் உதயராணி என்ற குழந்தை — வயிற்றில் படுகாயமுற்றது.

ஹெலிக்கொப்டர் ஒன்றும் வட்டமிட்டவாறு வேட்டுக்களைத் தீர்த்தது. ஹெலியிலிருந்து நடத்தப்பட்ட றொக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# முள்ளியவளை ஆஸ்பத்திரி மீதும் திங்கள் சுப்பசொனிக் குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், நவ. 17

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆஸ்பத்திரிகளைத் தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முள்ளியவளை அரசினர் ஆஸ்பத்திரி மீதும் நேற்று முன்தினம் பிற்பகல் 2.35 மணியளவில் ''சுப்பசொனிக்'' விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியிருக்கின்றன.

ஆஸ்பத்திரி பிரதேசத்தை இரு தடவைகள் சுற்றி வட்டமிட்ட பின்னர் விமானங்கள் ஆஸ்பத்திரி மீது குண்டுகளை வீசின.

குண்டுகள் ஆஸ்பத்திரிக்கு அருகே விழுந்து வெடித்தன.

குண்டு வீச்சை அடுத்து ஆஸ்பத்திரியில் இருந்த நோயாளர்கள், வெளி நோயாளர்கள், வைத்திய அதிகாரிகள் மற்றும் தாதிகள் அனைவரும் ஆஸ்பத்திரியை விட்டு நாற்புறமும் சிதறி ஓடினர்.

உள் நோயாளர் விடுதிகளில் தங்கியிருந்த நோயாளர்களும் — தமது நோய் அவஸ்தையையும் பொருட்படுத்தாமல் — உயிரைக் காக்கும் நோக்கில் சிதறி ஓடினர்.

இக் குண்டு வீச்சால் ஆஸ்பத்திரி சேதமடைந்தது. பலர் காயமடைந்ததாகவும் கூறப்படுகிறது.

(உ-3-15)

### பூநகரியில் சிக்குண்ட

## சிப்பாய்களின் விவரங்களை தெரிவிக்க நிலையங்கள்

பூநகரித் தாக்குதலில் உயிரிழந்த மற்றும்காணாமற்போன படையினர் பற்றிய விவரங்களை அவர்களின் உறவினர்கள் அறிய வசதியாக கொழும்பு இராணுவ தலைமையகத்திலும் —

இரத்மலானை பொலிஸ் நிலையத்திலும் —

கொழும்பு பெரியாஸ்பத்திரியிலும் —

கோட்டே ஜெயவர்த்தன புர ஆஸ்பத்திரியிலும் —

தகவல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

காயமடைந்த நிலையில் — அந்தந்த ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டிருக்கும் இராணுவச் சிப்பாய்கள் சம்பந்தமான விவரங்களும் —

தாக்குதலில் தப்பியவர்கள் மற்றும் காணாமற் போனவர்கள் பற்றிய விவரங்களும் இந்தத் தகவல் நிலையங்களில் கிடைக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

பூநகரி முகாமில் கடமையில் இருந்த இராணுவச் சிப்பாய்கள் பற்றிய விவரம் அவர்களின் பெற்றோர்களுக்கும், நெருங்கிய உறவினர்களுக்கும் இன்னும் 48 மணிநேரத்தினுள் அறிவிக்கப்படும் என இராணுவ பேச்சாளரான பிரிகேடியர் நளின் அங்கமன தெரிவித்தார்.

(உ-3)

### வடமாகாணத்தில்

## ராணுவத் தளப் பாதுகாப்பு; அதிகாரிகள் பார்வையிடுவர்

வடமாகாணத்தில் உள்ள இராணுவத் தளங்கள் மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளன என்றும் —

அடுத்த சில நாட்களில் வடமாகாணத்தில் உள்ள நிலைமையை பரிசீலனை செய்ய ஒவ்வொரு இராணுவ நிலையத்துக்கும் சிரேஷ்ட அதிகாரிகள் விஜயம் செய்வர் என்றும் இலங்கை வானொலி நேற்று அறிவித்தது.

(உ-3)

## இரு கடற் கரும்புலிகளுக்கும் மக்கள் நேற்று அஞ்சலி

பூநகரி கடற்படைத் தாக்குதலின் வெற்றிக்கு வித்தான கடற்கரும்புலிகள் மேஜர் கணேஷ், மேஜர் கோபி ஆகியோரின் உருவப்படங்கள் தாங்கிய ஊர்தி நேற்று பவனி வந்த போது மக்கள் உணர்வு பூர்வமாக அந்த இரு வேங்கைகளுக்கும் அஞ்சலி செலுத்தினர்.

ஊர்தி நேற்றுக் காலை புத்தூர் நவகிரியில் அமைந்துள்ள மேஜர் கணேஷின் வீட்டில் இருந்து புறப்பட்டு யாழ்ப்பாணத்தின் பலபகுதிகளினூடாக சென்றது.

ஊர்தி சென்ற இடம் தோறும் மக்கள் கூட்டம் கூட்டமாக நின்று மலர் தூவி, மலர்மாலை அணிவித்து கண்ணீர்மல்க அஞ்சலி செலுத்தினர். பலர் கதறி அழுவதைக் கூடக் காணக்கூடியதாக இருந்தது.

(உ-15-17)

## கிளிநொச்சியில் காயமுற்ற மூவர் வவுனியாவில் அனுமதி

கிளிநொச்சி ஆஸ்பத்திரி மீது நேற்று முன்தினம் நடத்தப்பட்ட விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலில் படுகாயமடைந்தவர்களில் ஆபத்தான நிலையில் இருந்த மூவர், [illegible] டனர்.

இடிபாடுகளுக்குள் இருந்து மீட்கப்பட்ட இரண்டு கர்ப்பிணித் தாய்மாரும், காயமடைந்த தாதி உத்தியோகத்தர்களில் ஒருவருமே வவுனியா ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

(உ-15)

## 'குமண' இன்று திரும்புகிறது

யாழ்ப்பாணம், நவ. 17

திருகோணமலைக்கும் — பருத்தித்துறைக்கும் இடையில் நோயாளர் மற்றும் பயணிகள் சேவையில் இரண்டு தடவைகள் ஈடுபட விருந்த 'குமண' கப்பல் இன்று வெறுமனாக கொழும்பு திரும்ப விருப்பதாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரி தெரிவித்தார்.

பாதுகாப்பு நிமித்தம் பயணிகள் சேவை நிறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இன்று கொழும்பு திரும்பும் 'குமண' எதிர்வரும் பெப்ரவரி அளவிலேயே மீண்டும் சேவையில் ஈடுபடும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(உ-3-5-143)

## வாதுவவில் வந்த மா இன்று இறக்கப்படும்

யாழ்ப்பாணம், நவ. 17

தற்போது காங்கேசன்துறையில் தரித்து நிற்கும் 'வாதுவ' கப்பலில் இருந்து மா இறக்கும் வேலைகள் இன்று பருத்தித்துறையில் ஆரம்பிக்கப் படவிருக்கிறது.

கடந்த வெள்ளிக்கிழமை இக்கப்பல் பருத்தித்துறைக்கு வந்தபோது, 'குமண' கப்பலில் உள்ள பொருள்களை இறக்குவதற்கு முன்னுரிமை அளிக்க வசதியாக இக்கப்பல் காங்கேசன்துறையில் தரித்து நின்றது.

இதேவேளை — கொழும்பு துறைமுகத்தில் பொருள்கள் ஏற்றிக் கொண்டு நிற்கும் 'கோமாரி' கப்பல் நேற்று மாலையே அங்கிருந்து பருத்தித்துறை நோக்கி புறப்படவிருந்ததாகவும் —

பெரும்பாலும் நாளை மறுதினம் பருத்தித்துறைக்கு அது வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் —

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரி ஒருவர் நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.

(உ-3-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### பயிற்சி வினாத்தாள்கள்

ஆண்டு 3 இல் இருந்து O/L வகுப்புவரை சகல பாடங்களுக்குமான மாதிரி பயிற்சி வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். விடையளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். Bond Institutes, யாழ்ப்பாணம்.

(28040)

### வெளிவந்துவிட்டது

'நித்திய கருமவிதி' வெளிவந்துவிட்டது. விவரங்களுக்கு: முகாமையாளர், சசவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(6808)



## 11 பொலீஸார் நிலக்கண்ணிக்கு பலி

ஆந்திரமாநிலம் — மெஹபூர் என்னும் நக்ஸலைட் தீவிரவாதிகளின் நிலக்கண்ணி வெடித் தாக்குதலில் சிரேஷ்ட பொலீஸ் அதிபர் ஒருவர் உட்பட பதினொரு பொலீஸார் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது. மற்றும் பல பொலீஸார் படுகாயமடைந்து குன்னூர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

(ஒ-எ)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

(17 – 11 – 1993)



பிறப்பு: 25 – 04 – 1950

இறப்பு: 18 – 10 – 1993

### சின்னத்துரை சோமசுந்தரம்

எதிர்பாராதவிதமாய் எங்கள் யாபேரையும் ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு, மின்னல் போல் பிரிந்து விட்டீர்கள் எங்கள் அன்புக்குரிய தெய்வமே!

இவரின் மரணச் சடங்கில் கலந்து கொண்டு ஆறுதலும், உதவிகளும் வழங்கியவர்களுக்கு எங்கள் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மனைவி: சோ. சுகிர்தமலர்,
மகன்: சோ. கலிஸ்ரோ,
சகோதர, சகோதரிமார்,
மைத்துணர்மார்.

82/7, 3ஆம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(28071)

## பரீட்சைச் சபை - கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்

## ஆண்டிறுதித் தேர்வு - 1993

## நேரசூசி

15 - 11 - 93 ஆம் திகதி பரீட்சை ஆரம்பமாகும் என எம்மால் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பப்பட்ட நேரசூசி பின்வருமாறு மாற்றப்பட்டு தேர்வு நடைபெறும்.

| | | | |
|---|---|---|---|
| 1 ஆம் நாள் | — 19 - 11 - 93 வெள்ளி | 2 ஆம் நாள் | — 20 - 11 - 93 சனி |
| 3ஆம் நாள் | — 29 - 11 - 93 திங்கள் | 4 ஆம் நாள் | — 30 - 11 - 93 செவ்வாய் |
| 5 ஆம் நாள் | — 01 - 12 - 93 புதன் | 6 ஆம் நாள் | — 02 - 12 - 93 வியாழன் |
| 7 ஆம் நாள் | — 03 - 12 - 93 வெள்ளி | 8 ஆம் நாள் | — 04 - 12 - 93 சனி முற்பகல் |
| | | 9 ஆம் நாள் | — 04 - 12 - 93 சனி பிற்பகல் |

நேரசூசி மாற்றத்தை அவதானித்துத் தேர்வினை செவ்வனே நடத்துமாறு சகல பாடசாலை அதிபர்களும் வேண்டப்படுகின்றனர்.

துரை தியாகராசா
செயலாளர்
பரீட்சைச் சபை

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்,
16 – 11 – 93.

குறிப்பு: இரண்டாம் கட்ட வினாத்தாள்களைப் பெறுவதற்கு சகல கொத்தணி உதவியாளர்களும் 25 – 11 – 93 புதன்கிழமை மு. ப. 9.00 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரிக்குச் சமுகம் கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(சி-6366)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தங்கம்மா இளையதம்பி

தோற்றம்: 19 – 06 – 1917

மறைவு: 27–11–1992

திதி: 17 – 11 – 1993

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்து எம்மை அன்போடும், பண்போடும் வளர்த்து நல்வழி காட்டி வாழ வைத்த தெய்வமே! எம்மை மீளாத்துயரில் ஆழ்த்தி விட்டுச் சென்று ஒரு வருடமாகியும் எங்கள் நினைவுகள் என்றும் உங்களை விட்டு நீங்காது, மறையாது.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

இராச வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(28067)

## பதவி வெற்றிடம்

சூழல் பாதுகாப்பில்-
ஆர்வம் உள்ளவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம்!
இதோ
சூழல் பாதுகாப்பினைப் பேணுவதற்கு ஒரு நிறுவனம்!!
வாருங்கள்
நீங்களும் இணைந்து கொள்ளலாம்!
சேர்ந்து பணியாற்றலாம்!

சூழல் பாதுகாப்புத் தொடர்பாக ஆரம்பிக்கப்படவுள்ள நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பதவிகளுக்கான வேலை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி: 25-11-1993

### 01. பொது முகாமையாளர்

தகைமைகள்
கல்வித் தகைமைகள்:

தாவரவியல் / விவசாய பட்டதாரி

அல்லது

விவசாயம் சார்ந்த அரச/தனியார் நிறுவனம் ஒன்றினை 05 தொடக்கம் 10வருடங்கள் நிர்வகித்த அனுபவம்

★ வயதெல்லை: 25 — 50 வரை

★ குறிப்பு: 1. வனவளத்துறையில் கடமையாற்றிய அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
2. கல்வித் தகைமைக்கும், அனுபவத்திற்கும் ஏற்ற தகுந்த சம்பளமும், வசதியும் வழங்கப்படும்.

### 02. கணக்காளர்

தகைமைகள்;
கல்வித் தகைமைகள்:

அங்கீகரிக்கப்பட்ட ஒரு கணக்குத்துறைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

அரச/தனியார் நிறுவனம் ஒன்றில் கணக்காளராக 05 வருடங்களுக்கு மேல் கடமையாற்றிய அனுபவம்

★ வயதெல்லை: 25 — 50 வரை

★ குறிப்பு: கல்வித் தகைமைக்கும், அனுபவத்திற்கும் ஏற்ற தகுந்த சம்பளமும், வசதிகளும் வழங்கப்படும்.

### 03. காசாளர்

தகைமைகள்:
கல்வித் தகைமைகள்:

க. பொ. த. (உயர்தரம்) 04 பாடங்கள் சித்தி

அல்லது

அரச/தனியார் நிறுவனம் ஒன்றில் 10வருடத்திற்கு குறையாது காசாளராக கடமையாற்றிய அனுபவம்

★ வயதெல்லை: 22 — 50 வரை

★ குறிப்பு: கல்வித் தகைமைக்கும் அனுபவத்திற்கும் ஏற்ற தகுந்த சம்பளமும், வசதிகளும் வழங்கப்படும்

### 04. கணக்கு எழுதுவினைஞர்

தகைமைகள்:
கல்வித் தகைமைகள்:

க. பொ. த. (உயர்தரம்) 04 பாடங்களில் சித்தி அடைந்திருப்பதுடன் கணக்கியல் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

அரச/தனியார் நிறுவனம் ஒன்றில் கணக்கு எழுதுவினைஞர் ஆக 05 வருடங்களுக்கு மேல் கடமையாற்றிய அனுபவம்

★ வயதெல்லை: 20 — 50 வரை

★ குறிப்பு: கல்வித் தகைமைக்கும், அனுபவத்திற்கும் ஏற்ற தகுந்த சம்பளமும், வசதிகளும் வழங்கப்படும்.

### 05. வன உத்தியோகத்தர்

தகைமைகள்:

வன இலாகாவில் வன உத்தியோகத்தராக 10 வருடங்களுக்கு குறையாது கடமையாற்றிய அனுபவம்.

அல்லது

அரச / தனியார் பெருந்தோட்டங்களில் வனம்வளர்ப்பது தொடர்பான பகுதியில் உத்தியோகத்தராக 05 வருடங்களுக்கு மேல் கடமை ஆற்றிய அனுபவம்.

★ வயதெல்லை: 30 — 50 வரை

★ குறிப்பு: சவுக்கு நடுகையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
கல்வித் தகைமைக்கும், அனுபவத்திற்கும் ஏற்ற தகுந்த சம்பளமும், வசதிகளும் வழங்கப்படும்.

### 06. தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்

தகைமைகள்:

அரச / தனியார் பெருந்தோட்டங்களில் தென்னை வள உத்தியோகத்தராக 10—15 வருடங்கள் சேவையாற்றிய அனுபவங்கள்

அல்லது

அரச / தனியார் தென்னந்தோட்டம் ஒன்றினை 10—15 வருடங்கள் நிர்வகித்த அனுபவம்

★ வயதெல்லை: 30 — 50 வரை

★ குறிப்பு: கல்வித் தகைமைக்கும், அனுபவத்திற்கும் ஏற்ற தகுந்த சம்பளமும், வசதிகளும் வழங்கப்படும்.

### 07. தொழிலாளர்கள்

தகைமை:

சவுக்கு, தென்னை மரங்களிலிருந்து விதை சேகரிப்பு மற்றும் நாற்று மேடை போடல், கன்று நடுகை போன்ற வேலைகளில் அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

★ சம்பளம்: பேசித் தீர்க்கப்படும்.
அனுபவத்திற்கு ஏற்ற தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
விளம்பர இல. 570,
C/O உதயன்,
யாழ்ப்பாணம்.

[சி-6365]

## மானிப்பாய் இந்துக் கல்லூரி

## ஆண்டு - 6 அனுமதி - 1994

மேற்படி வகுப்புக்கு அனுமதி பெற விரும்புவோர் அலுவலகத்தில் ரூபா 40/- செலுத்தி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து அனுப்பவும்.

விண்ணப்ப முடிவு திகதி: 30-11-93

- அதிபர்

(சி-6550)

## ஓராண்டு நினைவஞ்சலி



### அமரர் சின்னத்தம்பி சுப்பிரமணியம்

அவனியில்: 26 – 12 – 1920

ஆண்டவனடியில்: 28 – 11 – 1992

திதி: 17 – 11 – 1993

பேரோடும் புகழோடும் பெருவாழ்வு வாழ்ந்து, அன்பையும் பண்பையும் எமக்களித்து துக்க சாகரத்தில் நாம் மூழ்க, வானுலகம் சென்றீர்களோ! உங்கள் குரலோசை எம்மனையில் ஒலிப்பதெப்போ! எத்தனை ஆண்டுகள் சென்றாலும் எம் அன்புத் தெய்வமே! உங்கள் நினைவு நீங்காது. உங்கள் ஆத்மா சாந்தியடைய விநாயகரை வேண்டிக் கண்ணீரால் அஞ்சலி செய்கின்றோம்

அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

221/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(27994)

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்: 02 – 03 – 1974

மறைவு: 17 – 11 – 1991

### நடராசா ரகுதராயன்

"எங்கள் வீட்டின் விடிவிளக்கே!
இனிய குணங்கள் நிறைந்தவனே!
அப்பா, அம்மா சகோதரங்கள்
அலைகடல் துரும்பாய் அலையவிட்டு
எங்கே ஓடிப்போனாய் நீ,
தங்கக் கொழுந்தே எம் தவப்பயனே
ரகுதராயன் உன்னை நம்பி நாமிருந்தோம்
கற்புலத்து மனோன்மணி அம்பாள்
தீர்த்தக் கேணி தனிலே நீ,
நீச்சல் புரிந்து எமை நீத்தாய்
உனக்கேன் மரணம் வரவேண்டும்
வானம் பூமி பார்த்திருக்கும்
எங்கள் உடலில் உயிர் உள்ளவரையும்
உந்தன் நினைவு தானிருக்கும்".

உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும் இறைவனைப் பிரார்த்திக்கும்:

அன்பு அப்பா, அம்மா,
பாசமிகு உடன் பிறப்புக்கள்.

கலைவாணி லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(28062)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## அர்க்கமடையும் பேரினவாதம்

பூநகரிப் படுதோல்வியால் ஆத்திரமடைந்த ஸ்ரீலங்கா வான் படையினர் நேற்று முன்தினம் கிளிநொச்சியிலும் முல்லைத்தீவிலும் தமது கைவரிசையைக் காட்டி உள்ளனர்.

படையினரின் காட்டுமிராண்டித்தனமான—மிலேச்சத்தனமான தாக்குதல் வரிசையில் இந்த இரு மாவட்ட ஆஸ்பத்திரிகளும் இடம்பெற்று விட்டன.

அடுத்தடுத்து பல தோல்விகளைச் சந்தித்துக் கொண்ட படையினர், எந்த ஒரு வெளிநாடும் தட்டிக் கேட்காது என்ற துணிவில் தமிழ்ப் பகுதிகளில் கண்மூடித்தனமான தாக்குதல்களில் ஈடுபட்டுவருகின்றனர். சர்வதேச சட்டங்களைக் கூட மீறி எதனையும் அவர்கள் செய்யத் துணியலாம்

ஏற்கனவே குடாநாட்டில் யாழ். செயலகம் மீதும்—

குருநகர் சென். ஜேம்ஸ் ஆலயம் மீதும்—

யாழ். போதனா வைத்தியசாலைக்கு மிகச் சமீபமாக பாதுகாப்பு வலயத்துக்குள்ளும்— 'சுப்பசோனிக்' விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. நேற்று முன்தினம் கிளிநொச்சியிலும் முல்லைத் தீவிலும் நடந்த தாக்குதல்கள் வரப்போகும் நாட்கள் குறித்து மக்கள் சிந்தித்து எச்சரிக்கையாகச் செயலில் இறங்க வேண்டிய அவசியத்தை — அவசரத்தை உணர்த்துகின்றன.

மணலாறு மண்கிண்டி மலை முகாம் தகர்ப்பு, கிளாலி கடற்படைப் படகுகள் தகர்ப்பு, பருத்தித்துறைக் கடலில் இஸ்ரேல் தயாரிப்பு 'டோறா' பீரங்கிப் படகுத் தகர்ப்பு, 'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கை தோல்வி, கடைசியாக பூநகரி முகாம் தகர்ப்பு தொடர் வெற்றிகள் சிங்கள மக்கள் மத்தியில் ஸ்ரீலங்காப் படையினர் மீது அவநம்பிக்கையையும் தமிழர் குறித்து பெரும் அச்ச உணர்வையும் ஏற்படுத்தி இருப்பதை தென்னிலங்கைப் பத்திரிகைச் செய்திகள் மூலம் அறிய முடிகிறது.

கட்டாய ராணுவப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்றும் —

நாட்டை யுத்த நிலையில் வைத்திருக்க வேண்டும் என்றும் —

புலிகளை வெற்றி கொள்ள தெற்கில் சரியான தலைமை தேவை என்றும் —

முழுப் பலத்தையும் ஒன்று திரட்டி புலிகளுக்கு எதிராகச் சிங்கள மக்கள் போராட வேண்டும் என்றும் —

தென் இலங்கையில் இனவாதக் கூச்சல் எழும்பி இருக்கிறது.

இம்முறை தென்இலங்கையில் இருந்து வெளிவரும் தேசிய பத்திரிகைகள் சிலவும் இனவாதத்தைக் கக்க ஆரம்பித்துள்ளன.

அதாவது வடக்கு-கிழக்கில் தற்போது நடக்கும் போரை ஆட்சியில் உள்ள அரசுக்கு எதிராக நடக்கும் போராகக் காட்டாமல் முழு சிங்கள இனத்துக்கும் எதிரான போராகக் காட்டும் முயற்சிகள் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது முழுச் சிங்களவர்களையும் தமிழருக்கு எதிராகத் திருப்பும் ஒரு பயங்கர முயற்சி ஆகும்.

முழுத் தமிழர் சமுதாயத்துக்கும் எதிராக சிங்களவர்கள் ஒற்றுமைப்படும் நிலைமை ஒன்றும் உருவாகி வருகிறது.

பேரினவாதிகளின் எழுச்சியால் தமிழர் பகுதிகளில் படையினர் நடத்தும் அடாவடித்தனங்களுக்கு எதிராக தெற்கில் குரல் கொடுத்து வந்த ஒரு சில மனிதநேயச் சக்திகளின் குரல்களும் அடக்கப்படும் ஆபத்தும் தென்படுகிறது.

ஆகவே இன்றைய நிலையை தமிழ் மக்கள் தமது ஜீவ—மரணப் போராட்டமாகக் கருத வேண்டும்.

சமீபத்திய வெற்றிகளினால் இறுமாப்படைந்து விடக்கூடாது. போராட்டத்தில் அனைவரும் முழுமூச்சாக ஒன்றிணைய வேண்டும்.

இதன் மூலமே தென் இலங்கைச் சக்திகளை முறியடித்து வரப்போகும் பேராபத்தில் இருந்து விடுபட முடியும்.

---

போராளிகள் சரணடைந்ததை அடுத்து

# ஹஸ்ரத்பால் மசூதி முற்றுகை நேற்று அதிகாலையுடன் முடிவு

## 80 துப்பாக்கிகள், வெடிபொருள்கள் கைப்பற்றப்பட்டன

புதுடில்லி, நவ. 17

காஷ்மீர் விடுதலைப் போராளிகள் கைப்பற்றி இருந்த ஸ்ரீநகர் ஹஸ்ரத்பால் மசூதியை இந்திய இராணுவம் முற்றுகையிட்டிருந்தது நேற்று அதிகாலை முடிவுக்கு வந்தது.

மசூதியினுள் இருந்த போராளிகளும் ஏனையோரும் இராணுவத்திடம் சரணடைந்ததைத் தொடர்ந்து 31 நாள் முற்றுகையை இராணுவம் நேற்று விலக்கிக் கொண்டது.

போராளிகளும் ஏனையோரும் படையினரிடம் நேற்று அதிகாலை 2-20 மணி முதல் சரணடைய ஆரம்பித்தனர்.

சரணடைவது காலை 5 மணியளவில் முற்றுப்பெற்றது. அதன்பின்னர் இந்திய இராணுவத்தினர் 80 துப்பாக்கிகள், ரொக்கெட் லோஞ்சர்கள், இயந்திரத் துப்பாக்கிகள் மற்றும் வெடிப் பொருள்களையும் அவர்களிடம் இருந்து கைப்பற்றினார்கள்.

பின்னர் மசூதியினுள்ளே முஸ்லிம் மதகுருமார்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். மசூதியைச் சுற்றிப்பார்வையிட்ட அவர்கள் மசூதியின் புனிதத் தன்மை மாசுபடுத்தப்படவில்லை என்றும் நபிகள்நாயகத்தின் புனித சின்னங்கள் பாதுகாப்பாக இருப்பதாகவும் படையினரிடம் உறுதிப்படுத்தினார்கள்.

சரணடைந்த 65 போராளிகளும் ஏனையோரும் படையினரால் காவலில் வைக்கப்பட்டனர். (ஒ-எ)

# 92இல் 29 பெரிய யுத்தங்கள்! 60 லட்சம் பேர் உயிரிழப்பு!!

வாஷிங்டன், நவ. 17

1992ஆம் ஆண்டில் 29 பெரிய யுத்தங்கள் உலகின் பல பகுதிகளில் இடம்பெற்றன. இந்த யுத்தங்களில் பலியானவர்களின் எண்ணிக்கை 60 லட்சத்தைத் தாண்டியது என்று சர்வதேச அமைப்பு ஒன்று அறிவித்துள்ளது.

அமெரிக்கா – வாஷிங்டனை தலைமையகமாகக் கொண்டுள்ள உகல இராணுவ — சமூக செலவீன அமைப்பு என்ற பெயரிலான ஆராய்ச்சி ஸ்தாபனம் ஒன்று நடத்திய ஆய்வில் இது தெரியவந்துள்ளது.

கடந்த 17 ஆண்டுகளாக நடந்த யுத்தங்களில் கடந்த 1992ஆம் ஆண்டில் இறந்தவர்களின் எண்ணிக்கையே அதிகம் என்று ஆய்வு தெரிவிக்கிறது.

1990ஆம் ஆண்டு பெரிய எதிர்பார்ப்புடன் பிறந்தது. ஆனால் 1993ஆம் ஆண்டின் ஆரம்பமே சமாதானம் என்பது பெரிய மாயை ஆகும் என்று காட்டியது.

1987க்கும், 1990க்கும் இடையில் யுத்தங்கள் குறைந்திருந்தன. ஆனால் 1990இல் யுத்தங்கள் அதிகரிக்க ஆரம்பித்தன.

1991இல் புதிதாக 11 பெரிய யுத்தங்கள் உலகில் வெடித்தன. 1992இல் 29 யுத்தங்கள் நடந்து சாதனை ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

கெடுபிடி யுத்தம் மறைந்த பின்னர் இனமத ரீதியான யுத்தங்களும், பிரதேச எல்லை தொடர்பாக யுத்தங்களும் உலகில் அதிகரிக்க ஆரம்பித்தன.

இவ்வாறு இந்த ஆராய்ச்சி அமைப்பு இத்தொடரில் நடத்திய 15ஆவது ஆய்வில் தெரியவந்தது.

ஆண்டு ஒன்றுக்கு ஆயிரம் பேர் அல்லது அதற்கு அதிகமானோரை பலிகொள்ளும் அரசுகளுக்கு இடையேயான யுத்தமே பெரிய யுத்தமாக கணிக்கப்படுகின்றது என்று இந்த ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் உலகில் இடம்பெற்ற யுத்தங்களில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 2 கோடி 30 லட்சமாக அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

# கனடாவின் கவர்னராக டயானாவை நியமிக்குக!

## பிரபல பத்திரிகைகள் கோரிக்கை

ஒட்டாவா, நவ. 17

கனடாவின் கவர்னர் ஜெனரலாக டயானா இளவரசியை நியமிக்கும்படி அந்த நாட்டின் பிரபல பத்திரிகைகள் கோரிக்கை விடுத்துள்ளன.

டயானா இளவரசி போன்ற ஒருவர் தான் கனடாவுக்குத் தேவை என்று ''குளோப் அன்ட் மெயில்'' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இங்கிலாந்தின் முடிக்குரிய இளவரசரான சார்ள்ஸின் மனைவியான டயானா, இப்போது கணவனைப் பிரிந்து வாழ்ந்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுநலவாய அமைப்பு நாடுகளில் ஒன்றான கனடா இன்னும் இங்கிலாந்தின் முடியாட்சியை ஏற்றுக் கொண்டுள்ளது என்பதும் இன்னும் குடியரசு நாடாக தன்னை பிரகடனப்படுத்தவில்லை என்பதும் தெரிந்ததே. (ஒ—எ)

## சீன போர்க் கப்பல் பம்பாயில்!

புதுடில்லி, நவ. 17

சீனக் கடற்படையின் போர்க்கப்பல் ஒன்று நேற்று பம்பாய்த் துறைமுகம் வந்தடைந்தது.

இந்தியக் கடற்படை அதிகாரிகள் சீனக்கடற்படை அதிகாரிகளை வரவேற்றனர்.

சீனக் கடற்படைக் கப்பல் ஒன்று இந்தியா வந்திருப்பது இதுவே முதல் தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-எ)

## புனரமைப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் காலபோக செய்கைக்கான நீர்ப்பாசன வசதிகளை அதிகரிக்கும் நோக்குடன் சிறு குளங்களை புனரமைக்கும் பணியை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் கிராமிய உற்பத்திக்குழுக்களும் சேர்ந்து மேற்கொண்டன.

நெடுங்கேணி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு பிரதேசங்களில் இதுவரை 12 சிறிய குளங்கள் சிரமதான அடிப்படையில் புனரமைக்கப்பட்டன.

## நிவாரணம்

கடந்த வெள்ளி, சனிக் கிழமைகளில் இடம் பெற்ற வான், ஷெல் தாக்குதல்களினால் இறந்தவர்களின் குடும்பத்துக்கு உடனடி நிவாரணமாக 750 ரூபாவை வழங்க கெயர் இன்ரநஷனல் முன்வந்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் நடந்த வான் தாக்குதல் சம்பவம் குறித்து விவரங்கள் கெயர் இன்ரநஷனல் அமைப்புக்கு சமர்ப்பிக்கப்பட்டதாகவும்—

அதை அடுத்து இறந்தவர்களின் குடும்பங்களின் விவரங்களை அந்த அமைப்பு கோரியுள்ளதாகவும் — அரச அதிபர் தெரிவித்தார்.

# பூநகரி நிலைவரம் குறித்து எதிரணியினருக்கு விளக்கம்

## பிரதமர் ரணில் நேற்று முன்தினம் சந்திப்பு

கொழும்பு, நவ. 17

ஜனாதிபதி விஜேதுங்காவின் பணிப்புரையின்பேரில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா எதிர்க்கட்சிகளின் தலைவர்களை நேற்று முன்தினம் நாடாளுமன்றக் கட்டடத்தில் சந்தித்து, பூநகரி நிலைவரம் பற்றி விவரித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சிறிமா பண்டாரநாயக்கா, மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனா, ஐக்கிய சோஷலிச அணித் தலைவர் அத்தாவுட செனவிரத்னா, ஈ. பி. ஆர் எல். எப். எம்பி சுரேஷ் பிரேமசந்திரன் ஆகியோர் அச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

முப்படைகளின் தளபதிகளுடன் இராணுவத் தலைமை நிர்வாக அதிகாரி மேஜர் ஜெரி டி சில்வாவும் அச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

துர்க்காதேவி தேவஸ்தானம்

# தேவாலயக் குண்டு வீச்சை கண்டித்துத் தீர்மானம்

யாழ்ப்பாணம், நவ. 17

கத்தோலிக்க மத வழிபாட்டுத் தலமாகிய சென். ஜேம்ஸ் (புனித யாகப்பர்) தேவாலயத்தின் மீது நடத்தப்பட்ட விமானத் தாக்குதல் குறித்தும் —

யாழ். செயலகத்தின் மீது குண்டு வீச்சு நடைபெற்றது குறித்தும் —

கண்டனம் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் நிறைவேற்றியுள்ளது.

மாவட்டப் பேராயருக்கும் யாழ். செயலக அதிபர் திரு. கா. மாணிக்கவாசகருக்கும் தமது அனுதாபத்தைத் தெரிவிப்பதாகவும் இத்தீர்மானம் கூறுகின்றது. (க)

# எழுத்து வாசிப்புப் பயிற்சி மாணவருக்கு வேண்டும்

## கல்விப் பணிப்பாளர் உரை

நீர்வேலி, நவ. 17

''மாணவருக்கு சரியான எழுத்துப் பயிற்சியும் வாசிப்புப் பயிற்சியும் வழங்க வேண்டும்''

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தமது உரையின் போது இவ்வாறு கூறினார்.

கல்லூரி அதிபர் வீ. கணேசராசா தலைமையில் அண்மையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

''இன்று ஆரம்ப ஆசிரியர்களாக நியமனம் பெற்றவர்கள் விசேடதர ஆசிரியர்களாகிப் பயிற்சிக்குச் சென்று விடுவதால் ஆரம்ப ஆசிரியர்களின் இடம் காலியாகவுள்ளது. எனவே எந்தத் தரத்தில் உள்ள ஆசிரியர்களும் ஆரம்பக் கல்வி புகட்டத் தயாராக இருக்க வேண்டும்.''

கல்லூரிப் பழைய மாணவன் த. நவரட்ணராசா ஸ்தாபகர் நினைவுப் பேருரையை நிகழ்த்தினார். கல்லூரியின் முதல் மாணவன் க.ச. முத்துவேற்பிள்ளை, புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரி அதிபர் சந்திரசேகரம்பிள்ளை, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் முத்துக்குமாரசாமி ஆகியோரும் பேசினார்கள். [illegible] தேவராணி சுந்தரலிங்கம் பரிசில்களை வழங்கினார். (க-110-72)

வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம்

# குண்டு வீச்சைக் கண்டித்து ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், நவ. 17

யாழ். செயலகம், யாழ்ப்பாணம் புனித யாகப்பர் ஆலயம், யாழ். போதனா வைத்தியசாலைக்கு அண்டிய இடம் ஆகியவற்றின் மீதான விமானக் குண்டுத் தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கும் மகஜர் ஒன்றை வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் ஸ்ரீலங்கா ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளது.

மகஜரில் கூறப்பட்டுள்ளதாவது:-

யாழ். குடாநாட்டு மக்கள் இடைவிடாது பயத்துடனும் ஆபத்தின் மத்தியிலும் வாழ்கிறார்கள். பாடசாலைகள், வழிபாட்டுத்தலங்கள் மற்றும் பொது நிறுவனங்கள் இத்தகைய கண்மூடித்தனமான குண்டுவீச்சுக்களால் இயங்க முடியாதிருக்கின்றன.

அரசாங்கம் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதாகக் கூறிக்கொண்டு அப்பாவிப் பொதுமக்களை அழிக்கின்றது. அரசியல் தீர்வு ஒன்றைக் காண அது விரும்பவில்லை என்பதையே இது தெளிவாகக் காட்டுகின்றது.

[illegible] கண்மூடித்தனமான குண்டு [illegible] மொழிதலையும், ஷெல்தாக்குதலையும் உடனடியாக நிறுத்தும்படி பாதுகாப்பு படைகளுக்கு உத்தரவிடும்படி யாழ்ப்பாணப் பொதுமக்கள் சார்பில் நாங்கள் மேன்மை தங்கிய உங்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

அத்துடன் ஊரடங்கு நேரத்தில் போக்குவரத்துத் தடையை நீக்கும்படியும் நாம் உங்களை வேண்டிக் கொள்கிறோம். இத்தடையால் தொண்டர் நிறுவனங்கள் காயமுற்றோருக்கு மருத்துவ மற்றும் உதவிகளும் உணவு விநியோகமும் தடங்கல் ஆகின்றன — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## வெற்றிலை தட்டுப்பாடு

கிளாலிப் போக்குவரத்து தடைப்பட்டிருப்பதால், வெற்றிலையின் விலை ஏறியுள்ளது.

வெற்றிலைக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதால் சில இடங்களில் நேற்று ஒரு வெற்றிலை 9 ரூபாவுக்கு விற்பனையானது.

## 'புதிர்' வெளியீடு

சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயத்தில் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் 'புதிர்' நூல் வெளியீட்டு விழா இடம் பெறும். (ஓ-89)

---

ஓம்
பிரேம சாந்தி



அருள்மிகு
சுவாமி பிரேமானந்தா
அவர்களின்
42ஆவது ஜெயந்தி தினம்
17 – 11 – 1993

இன்றைய தினம் காலை 10மணிக்கு தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலயத்தில் விசேட அபிஷேகம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து ஸ்ரீ பிரேமானந்தா ஆசிரம வடபிரதேச ஒருங்கிணைப்பாளர் இல்லத்தில் பஜனை, பிரார்த்தனையும் சுவாமியின் பெயரில் பாடப்பெற்ற திருவூஞ்சல், பக்திப்பாடல்கள் அடங்கிய ஒலிப் பதிவு நாடா நிகழ்ச்சியும் நடைபெற இருக்கின்றன.

அமைதி சாந்தி நிலவி, நாடு சுபீட்சம் பெற சுவாமியைப் பிரார்த்திப்போமாக;

ஜெய் பிரேம சாந்தி!

நடராசா,
பாக்கியலட்சுமி.

தம்பிகுமார் வீதி,
எரிபொருள் நிலைய அருகில்,
சுன்னாகம். [28052]

பிற்போடப்பட்டுள்ளது

யாழ்/இந்து மகளிர் கல்லூரியில் இன்று (17-11-93) புதன் கிழமை நடைபெற இருந்த மாணவ முதல்வர் ஒன்று கூடல் வைபவம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அனைத்துப் பாடசாலைகளிற்கும் அறியத்தருகின்றோம்.

- உப அதிபர்

(28072)

வணிகசுடர் வெளியீடு

இன்று (17-11 93) புதன்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். பெற்றோர்கள், பழைய மாணவர்கள், விளம்பரதாரர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்.

கொக்குவில் இந்துக் கல்லூரி,
கொக்குவில். (சி-6549)

7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்: 02 — 03 — 1937



இறைவன் அடியில்: 05 — 11 — 1986

செல்லத்துரை சுப்பிரமணியம்
(இராவணன்)

திதி: 17 – 11 – 1993

முருகனுக்கு அபிஷேகம் செய்ய நினைத்தீரே! அன்று எங்கள் முழுநிலவு மறைந்ததுவே!
ஏழு ஆண்டு சென்றாலும் உங்கள் நினைவு நீங்காதே உங்கள் ஆசி என்றும் என்னை வழிநடத்துகின்றனவே உங்கள் சாந்திக்கு நல்லூரானை வேண்டுகிறேன்.

உங்கள் பிரிவால் வாடி வதங்கும்:
மனைவி, பேறாமக்கள்.

511, பருத்தித்துறை வீதி,
நல்லூர். (28019)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீர அஞ்சலி

## லெப்டினன்ட் கனியன் (நிசாந்)

சில்வன் சஜீவன் ஆரோக்கியநாதர்
(புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன்)

லெப்டினன்ட் கனியன் (நிசாந்) சில்வன் சஜீவன் ஆரோக்கியநாதர் (புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன்) பூநகரி முகாம் தாக்குதல் நடவடிக்கையின் போது வீரச்சாவடைந்தார்.

இவர் திரு. ஆரோக்கியநாதர் (சிசிலியன் கல்வி நிலைய உரிமையாளர்) - திருமதி மில்றெட் ஆரோக்கியநாதர் (புனித ஜோன் பொஸ்கோ ஆசிரியை) ஆகியோரின் சிரேஷ்ட புத்திரனும் நிகால் நிறோஜினி (மாணவி, திருக்குடும்பக் கன்னியர் ஆங்கிலமடம்), தீபன், திலீகன் (மாணவன், புனித பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், சகபோராளிகள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு. திருமதி ஆரோக்கியநாதர்
5/5, அச்சக ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(28080)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி முருகேசு தெய்வானை

கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற முருகேசுவின் பிரிய பத்தினியாகிய தெய்வானை அவர்கள் இயற்கை எய்தினார்.

அன்னாரின அந்திமக்கிரியைகள் நேற்று (16-11-93) வட்டக்கச்சியில் இடம்பெற்றன என்பதை உற்றார் உறவினர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
மு. குமாரசாமி
(மயில்வாகனம்)
[மகன்]
276 சில்வாவீதி,
வட்டக்கச்சி.
(28078)

## வைத்திலிங்கம் துரைச்சாமி

வட்டு. கிழக்கைச் சேர்ந்த வைத்திலிங்கம் துரைச்சாமி [ஓய்வு பெற்ற ஆசிரியர்] 16-11-1993 இல் காலமானார்.

இவர் தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும், பசுபதிராஜா [கொழும்பு], கடம்பராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், மல்லிகாதேவியின் அன்பு மாமனாரும், அன்னபூரணத்தின் அன்பு அண்ணனும், கருணானந்தன் [இங்கிலாந்து], அருளானந்தம் [பதுளை], சிவானந்தன் [அதிபர்], சர்வானந்தன், திருமதி இ. சிவபாலரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும்,

தகவல்:
து. கடம்பராஜா
(மகன்)
வட்டு. கிழக்கு,
வட்டுக்கோட்டை,
(28082)

## நவமணி சிதம்பரப்பிள்ளை

சுண்டுக்குளி விதானையார் வீதியை சேர்ந்த திருமதி நவமணி சிதம்பரப்பிள்ளை 16. 11. 93 செவ்வாய்க்கிழமை அகால மரணமானார்.

இவர் காலம் சென்ற தம்பிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை (மதுபான இலாகா) அவர்களின் அன்பு மனைவியும், நேசராசா, சிங்கராசா, (மாநகர சபை யாழ்ப்பாணம்) சண்முகராசா, செல்வராசா, ஜீவராசா ஜீதாம்பாள், கமலாம்பாள், யோகாம்பாள், காந்திமதி சுந்தரம்பாள், ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி நே. கனகாம்பிகை, திருமதி சி. பராசக்தி, திருமதி செ. ஜெயந்தி, சு. கமலநாதன், பத்மநாதன், நவரத்தினம் சந்திரபோஸ் ஆகியோரின் அன்பு மாமியும், காலம் சென்ற பொ. இராசு, சபாரத்தினம், அழகரத்தினம், சிவஞானமணி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று காலை 10 மணிக்குஅவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

தகவல்
சி. சிங்கராசா (மகன்)
திருமதி அ. சிவ ஞானமணி
(சகோதரி)
பேரப்பிள்ளைகள்.
32/1 விதானையார் வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
(28079)

திருமதி
## நெல்லி எலிசபேத் பஸ்தியாம்பிள்ளை
(இராசம்மா — ஈச்சமோட்டை)

திருமதி நெல்லி எலிசபேத் பஸ்தியாம்பிள்ளை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பெஞ்சமின் பஸ்தியாம்பிள்ளையின் அன்பு மனைவியும், வில்வம், காலஞ்சென்ற விக்ரோறியா, காலஞ் சென்ற றெஜீனா அகஸ்ரின், காலஞ் சென்ற விஜயம், காலஞ் சென்ற டாக்டர் வீரசிங்கம், திரு அல்பிறட் செல்லத்துரை, காலஞ் சென்ற திருமதி மணிவேதநாயகம், திரு வின்சன் சேர்ச்சில், திரு நவரெட்ணசிங்கம் (ஈடன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு அகஸ்ரின் (முன்னாள் A. G. A நல்லூர்), திருமதி பேளி, திருமதி யோசேப்பின் (இளைப்பாறிய ஆசிரியை புனித கென்றியரசர் கல்லூரி), திருமதி ஜொய்சி, திருமதி ஜீன், திருமதி கலாநிதி (பபா) (இளைப்பாறிய மாநகரசபை உத்தியோகஸ்தர், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற அருட்திரு. தோமஸ் அடிகளாரின் (செபமாலைத் தாசர் சபை) அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரது பூதவுடல் இன்று மாலை 3.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை அனைவரும் எற்றுக்கொள்ளவும்.

தகவல்
M. N. நவரெட்ணராஜா
61/3 ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.
(28083)

## கலை, வர்த்தக கல்லூரி
## C. C. A.

மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

வகுப்புக்கள் யாவும் வழமையான நேர அட்டவணைப் படி **18 — 11 — 1993** இல் இருந்து நடைபெறும்.

- நிர்வாகி.

[சி-6548]

# விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ. 17

யாழ். மாவட்ட ப. நோ. கூ. சங்கங்களுக்கிடையே மாவீரர் வெற்றிக் கேடயத்துக்காக யாழ். ப. நோ. கூ. சங்க விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் ஆட்டங்கள் இன்று பிற்பகல் யாழ். இந்து மைதானத்தில் நடைபெறும். பங்குபற்றும் ப. நோ. கூ. சங்க அணிகள் வருமாறு:-

★ 2.00 மணி:- தெல்லிப்பளை எதிர் பருத்தித்துறை.

★ 3.00 மணி:- நெல்லியடி எதிர் மானிப்பாய்.

★ 4.00 மணி:- மருதங்கேணி எதிர் வேலணை.

★ 5.00 மணி:- நீர்வேலி எதிர் யாழ்ப்பாணம்.

★ ★ ★

யாழ். கல்வித் திணைக்களம் யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் — 19 வயதுப் பிரிவில் — இன்று பிற்பகல் 2.30 மணி முதல் யாழ். பல்கலைக் கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ கனகரத்தினம் ம.ம.வி. எதிர் மகாஜனா.

★ வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி ம.ம.வி. எதிர் சென். ஹென்றிஸ் கல்லூரி.

## நெஞ்சத்தில் நீங்காத
# 7 ஆம் நாள் நினைவு

| வீரப் பிறப்பு: | வீரச்சாவு: |
|---|---|
| 26 — 12 — 1971 | 11 — 11 1993 |

## கப்டன் இராவணன் (கோணேஸ்)

மரியதாஸ் யேசுதாஸன்
நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்றுறை "தீவகம்"

பூநகரி இராணுவ முகாம் தகர்ப்பில் வீரகாவியம் படைத்த கப்டன் இராவணன் (கோணேஸ்) அவர்களுக்கும், அவரோடு வீரச்சாவு அடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது இதயபூர்வமான கண்ணீர் அஞ்சலிகள்.

வீரச்சாவைத் தழுவிக்கொண்ட இவரது 7 ஆம் நாள் நினைவுகளில் எமது இல்லத்தில் நடைபெறும் விருந்துபசாரத்தில் சக போராளிகளையும், உறவினரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
ச. ஞானசீலி
(சகோதரி)
மணியரசன் வீடமைப்புத் திட்டம்,
பூம்புகார் வீதி,
அரியாலை "தீவகம்."
(28077)

# ஓராண்டு நினைவஞ்சலி

## அமரர் க. மார்க்கண்டு

திதி: 17 — 11 — 1993

ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட தங்கள் நினைவு என்றும் எம்மைவிட்டு நீங்காது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய விநாயகப் பெருமானை வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்,
அன்புத் தாய், தங்கை,
மைத்துனர், மருமகன்.
"தேவபவனம்",
கைதடி-நுணாவில்,
சாவகச்சேரி.
(28074)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| தாயின் மடியில்: | இறைவன் அடியில்: |
|---|---|
| 25 — 06 — 1968 | 10 — 11 — 1991 |

## செல்வி கந்தசாமி கிஸ்ணகுமாரி

திதி: 17 — 11 — 1993

கொடிநோய்க்கு ஆளாகி எமைப் பிரிந்து
ஈராண்டு சென்றாலும், எம் மனதில்
நீங்கா இடம் பெற்ற பாசமே! ஆருயிர் செல்வமே!!
உம் ஆத்மா சாந்திபெற ஈசனைப் பிரார்த்திக்கின்றோம்.
சாந்தி!!!

அன்பின் அப்பா, அம்மா, அக்கா,
அண்ணன், தம்பி.
ஏ. சி. கந்தசாமி.
75, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
[28070]

## ஜயந்தி தினம்

சுவாமி பிரேமானந்தாவின் 42 ஆவது ஜயந்தி தினமான இன்று தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் காலை 10 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறவிருக்கின்றன.

அதைத் தொடர்ந்து சுன்னாகம் ஆச்சிரமத்தில் சுவாமியின் வட பிரதேச ஒருங்கிணைப்பாளர் திருமதி. பாக்கியலட்சுமி நடராசா தலைமையில் விசேட பஜனை, பிரார்த்தனைகள் இடம்பெறும். (உ-89)

## ம. எண்ணெய் திருட்டு

வடமராட்சி, நவ. 17

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை களஞ்சியத்திலிருந்து 210 லீற்றர் கொண்ட ஒரு பரல் மண்எண்ணெய் இரவு நேரத்தில் களவாடப்பட்டுள்ளது.

இக்களவு தொடர்பாக வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் எஸ். கதிரைவேற்பிள்ளை பருத்தித்துறை காவல்துறையில் முறைப்பாடு செய்துள்ளார். (உ-173)

## நாளை

யாழ்ப்பாணம், நவ. 17

கோட்டக் கல்வி அலுவலர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை வியாழன் முற்பகல் 10 மணிக்கு யாழ். கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (உ-5)

## தொண்டமானாறில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட் தாக்குதலில் தொண்டமானாறு வீரகத்தி மகா வித்தியாலயத்தின் ஒரு பகுதி சேதமடைந்தது.

கடற்படைப் படகுகளும் ஹெலிக்கொப்டர்களும் நடத்திய தாக்குதலில் சில மீன்பிடிப் படகுகளும் சேதமடைந்தன. மயிலியதனைப் பகுதியில் மீன்பிடி இழுவைப் படகுகள் இரண்டும் சேதமுற்றன.

தொண்டமானாறு, பொலிகண்டி, சக்கோட்டை, இன்பருட்டி, சுப்பர்மடம், பருத்தித்துறைக் கடற்கரையை அண்டிய பிரதேசங்களில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கியும் பீரங்கிப் படகுகளிலிருந்து தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்று மாலை 4 மணியளவிலும் பலாலியிலிருந்து வடமராட்சிப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

(உ-15-155-173)

# பொலிவிழந்து காணப்படும் சாவகச்சேரி நகரம்

சாவகச்சேரி, நவ. 17

தென்மராட்சிப் பகுதிகள் — குறிப்பாக சாவகச்சேரி நகரப் பகுதி பொலிவிழந்து காணப்படுகிறது.

விமானப் படையினர் எவ்வேளையிலும் தாக்குதல் நடத்தலாம் என்ற பீதியினால் மக்கள் நடமாட்டமின்றி நகரம் சோபை இழந்துள்ளது.

ஏற்கனவே பொது மக்களில் ஒரு பகுதியினர் இடம்பெயர்ந்து விட்டதாலும், பீதியினால் நகருக்கு மக்கள் வருவதைக் குறைத்துக் கொண்டுள்ளதாலுமே நகரப் பகுதி வெறிச்சோடியுள்ளது.

சாவகச்சேரியில் பாடசாலைகள், அலுவலகங்கள் எல்லாம் மூடப்பட்டுள்ளன. கடைகள் மற்றும் சந்தைகள் போன்றவையும் திறக்கப்படவில்லை.

கிராமப் புறங்களிலேயே சந்தைகள் கூடுகின்றன. சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம் மக்களுக்கு வேண்டிய பொருள்களை விற்பனை செய்து வருகிறது. (ஒ-ரி)

## பூநகரித் தாக்குதல் மூலம் நிரூபணம்:
# தமிழீழத்தைப் பெறுவதற்கு புலிகள் தகுதி உடையவர்கள்
## மட்டு. மாவட்ட எம். பி. கூறுகிறார்

கொழும்பு, நவ. 17

பாரிய பூநகரி இராணுவ மற்றும் கடற்படைக் கூட்டுப் படைத் தளத்தைத் தாக்கி அழித்ததன் மூலம் தமிழீழத்தை பெறுவதற்கு விடுதலைப் புலிகள் அருகதை உடையவர்கள் என்பது தெளிவாகியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட எம்.பியான பஷீர் சேகுதாவூத் முன்கண்டவாறு நேற்று நாடாளுமன்றத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:-

பூநகரித் தாக்குதலின் பின்னர் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்பது கூடுதலாக உணரப்படுகின்றது.

விடுதலைப் புலிகளின் பலம் கடந்த பத்தாண்டுகளிலும் பார்க்க பாரதூரமான வகையில் வளர்ச்சி அடைந்துள்ளது.

விடுதலைப் புலிகளின் வளர்ச்சி ஜனாதிபதி ஒருவர் கொழும்பில் கொலை செய்யப்படும் வரை உணரப்படவில்லை. ஆரம்பத்தில் மறைந்திருந்து தாக்குதல் நடத்தி வந்த விடுதலைப் புலிகள் இன்று பூநகரி போன்ற பாரிய முகாம்களைத் தாக்கும் அளவுக்கு வளர்ச்சி அடைந்துள்ளனர். அவர்கள் தனிநாடு ஒன்றை பெறுவதற்கு அருகதை உடையவர்கள் என்பது இதன் மூலம் தெளிவாகிறது.

ஆதலினால் அரசியல் தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியம் தற்போது கூடுதலாக உணரப்படுகிறது.

தீர்வு காணும் சமாதானப் பயணம் ஒன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் செல்ல சபாநாயகர் முஹம்மது எண்ணியுள்ளார். என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்படி சபாநாயகர் யாழ்ப்பாணம் செல்வதாயின் அவர் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்லும் அரசின் சமாதான யோசனையை பொதுமக்களுக்கு பகிரங்கப்படுத்தவேண்டும்— என்றார். (உ-எ-6)

## மன்னாரில் 2 மணி நேரம் ஊரடங்கு தளர்வு

யாழ்ப்பாணம், நவ. 17

மன்னாரில் அமுலில் இருக்கும் ஊரடங்குச் சட்டம் நேற்று பிற்பகல் 3 மணியில் இருந்து 5 மணி வரை தளர்த்தப்பட்டதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் அமுல் செய்யப்பட்ட ஊரடங்கால் பொதுமக்கள் பெரும் கஷ்டமடைந்ததாகவும்—

அதையடுத்தே அங்கு நேற்று ஊரடங்கு சிறிது நேரம் தளர்த்தப்பட்டதாகவும்—

அந்த நேரத்தில் மக்கள் கடைகளில் பொருள்களை வாங்குவதை அவதானிக்க முடிந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## இன்று

யாழ்ப்பாணம், நவ. 17

பாலர் கல்வி தொடர்பான கருத்துக்களைப் பெறும் நோக்குடன் கோப்பாய் பிரதேச செயலர் பகுதியிலுள்ள பாலர் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுடனான சந்திப்பு ஒன்று இன்று புதன் காலை 10 மணிக்கு கோப்பாய் காமாட்சி பாலர் பாடசாலையில் நடைபெறும். யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் பாலர் கல்வி ஒருங்கிணைப்புக் குழு இதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளது.

(ஒ-162)

## 'சுப்பசொனிக்'...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆலோசனை கூறியிருக்கின்றனர்.

அதைத் தொடர்ந்தே முன்கண்ட முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

விமானப்படை சின 'எவ் 5 மற்றும் 'எவ் - 7 ஜெட்போர் விமானங்களை'சுப்பசொனிக்' விமானங்களை) வடக்கு கிழக்குப் போரில் பயன்படுத்தி வருகிறது.

அடுத்தமாத பிற்பகுதியில் அல்லது அடுத்த ஆண்டு முற்பகுதியில் சீனப் போர் விமானங்களை சீனக்குடா விமானத் தளத்தில் நிறுத்தி வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

(உ-எ)

உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக வருடம் கார்த்திகை மாதம் 3ஆம் நாள் வியாழக் கிழமை (18 - 11 - 1993) பிற்பகல் 6-00 மணி முதல் 7-00 மணிவரையுள்ள
★ இடப லக்கின சுபமுகூர்த்தத்தில் ★

| எங்கள் புத்திரன் திருநிறை செல்வன் **சிவசங்கரன்** அவர்களுக்கும் | எங்கள் புத்திரி திருநிறை செல்வி **பாலகௌரி** அவர்களுக்கும் |
|---|---|

கொழும்பு வெள்ளவத்தை ஹோட்டல் சபையரிலுள்ள செமிராமிஸ் மண்டபத்தில் திருமணம் நடத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள், தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து அதைத் தொடர்ந்து நடைபெறும் இராப்போசன விருந்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன்
★ அழைக்கின்றோம் ★

O தங்கள் நல்வரவை நாடும்: O

திரு. திருமதி பொ. சிவசுப்பிரமணியம்,
வட்டு. கிழக்கு, சித்தன்கேணி.
(155, A/2/6 எல்விற்றிகல மாவத்தை,
கொழும்பு - 08)

திரு. திருமதி வ. சண்முகம்,
19, அன்வி அவனியூ,
தெஹிவளை.

தனிப்பட்ட அழைப்பிதழ் அனுப்ப முடியாமைக்கு மன்னிக்கவும்

(28073)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறை வேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள [illegible] 17 - 11 - 1993 இல் [illegible] வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org